உ

முருகன் துணை.

# ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமாடிக் கம்பெனியில்

நடந்தேறிவருகிற

பார்ஸி

## லலிதாங்கி & மலையாள பங்கஜவல்லி

முக்கிய பாடல்களடங்கியதாம்.

மனமோகன ரங்கசாமி நாயிடு,

**P. S.** ரமச்சந்திரம் பிள்ளை &

**R.** கோவிந்தசாமி நாயிடு

பாடிவருவதுமாகியது.

TRICHINOPOLY:

கர்பு நிலைதவருத

பார்ஸி லலிதாங்கி ஸ்ரீ பார்ஸி மலையாள பங்கஜவல்லி.

## விநாயகர் துதி,

சுந்தர கணநாதா என்ற வர்னமெட்டு.

வந்தனங் கணபதியே நல்ல
வரந்தாராய் சத்தி வல்லபை நிதியே. (வந்)

சுந்தரா நம்பினேன் சுழுத்தி மூலாதரா
மைந்தர்க் கருள்புரியும் மகிழும் பீஜாக்ஷரா. (வந்)

அம்பிகை தணையா லம்போதரா ஒற்றைக்
கொம்போனே சரணம் (வந்)

நம்பினே னுன்னை நான்மறை நேயா
தும்பி முகவனே துணைவந்தருள் சகாயா. (வந்)

தினம் ஆலந்தூர் ஒரிஜனல் டிராமாடிக்
பெனிக் காதார மானவா. (வந்]

2. இராகம் பைரவி தாளம் ஆதி.

கோடி மானோஜ சமான ரூபே
பஹூ பாஜே பஹூதாப்ரதாபி
ஹாஜான பாஹிதா ஹராதிந்த நேத்ரதா
கத்வாஹினி ப்ரமத்தி அச்சாமதி
கத்வாஹினி ப்ரமத்தி.

3. நாததர் தர்தோம் சுந்தர் த்ர்தீம் என்ற வர்னமெட்டு.

லலி. ஆலயப்பூஜை யனுதினம் நடக்கின்றதா
அமைச்சரே சொல்வீர் சொல்வீர்.

மந். காலந் தவராமல் பூஜை கண்யமாய் நடக்குதம்மா.

லலி. தான தர்மம் குறைவின்றியே நடக்கின்றதா
சாற்றிடுவீர் மந்திரிகளே.

மந். மானிலத்தில் சகலதானம்
மகிழுடன் நடக்கின்றதே.

லலி. மாதமூன்றுமாரி பெய்யுதா மறையாகமம்
வேதிய ரோதுரார சொல்

மந். பூதலத்தில் மாரிபெய்து வேதியரோதுருர் மறை.

லலி. குடிகட்கேதும் தீங்கில்லாமல் வாழ்கின்றனரு
கூறுவீரே சீக்கிறமாக.

மந். படிமிசையில் க்ஷேமமாக
பயிர் செழித்து வாழ்கின்றாரே.

4. லலிதாங்கி—வருத்தாதே, மன்மதா என்ற வர்னமெட்டு.

வருத்தாதே சித்தஜா—மலர்க்கணை தூவி
வருத்தாதே அங்கஜா.

கருத்துங் குலைந்திடவே கவலையாக்காதே பாவி
புருடரிருந்தாலிப்படி புவியில் செய்வாயோ மேவி. வ.

இதனாலல்லவோ முன்பு ஈசனெரித்தாரே உன்னை
மதமின்னம் போகவில்லையா மாரா வீணாக என்னை வ.

நாராய்ணசாமியை நாடினின்றேன்புனிதா
நீராயுருக்கிடாதே நீயுமிவ்விதஞ்சதா வ.

5. ஜபரியாசமுஸ என்ற வர்னமெட்டு.

அழ. மந்திரிநமது நாட்டில்மும்மாரி
மகிழுடன் பெய்யுதா சொல் சொல் சொல்.

மந். சந்ததமோங்கி மாரிபெய்வதால்
சடுதியில் விளையுதே நெல் நெல் நெல்.

6. தரு, கருத்துக்கிசைந்த என்ற வர்னமெட்டு.

மனதிற்க்கிசைந்த மதனைப்பார்த்தேன்
மையலாகிரி யதனைத்தீர்ப்பேன்.

எனதாசைக்குகந்த மோகனன் இவர்தானணைகுவேனோநான்
கனங்குறையுதே யென்செய்குவேன் காமியிவர் அனைவாரோதான்
முத்துகள்போல் பல்வரிசையும் முகமோசந்திர பிம்பந்தானோ

சித்தஜனு மீடாகுவானே சிவந்தமேனி யுள்ளபூமானே ம.
தேடினுமெங்கணுங்கிட்டா தேமர்படர்ந்தமார்பன் மாரன்
யீடில்லா மந்தகாசன் இவர்தானெனக் கேற்றவீரன்.

## 7. இங்கிலீஸ் பதம்.

வாண்டிங்-லவ்லி-கிஸ்-ஒய் நாட்லேக்
வெக்ஸிங்-டோன்ட்-வான்ட் மிஸ் மை டியர் லவ்

பான்வி நோபில் டியர்
கான்யூ என்ஜாய் ிியர்
தாஙயு ஓய் டியு பியர்
ஐ யாம் நவ் க்ளியர்
மை ஓர்ட் யூ யியர் மைடியர் லவ்.

ஐ யாம் நவ் அனேபில்
ஓய் யூ வைஷ மே நோபில்
கைண்டளி கிஸ் ஹானரேபில்
டெய்ண்டு யூ மை லார்ட்
பெய்த் புல்லி மை கார்ட் மைடியர் லவ்.

8. தரு ஹரியரம்பாணே என்ற வர்னமெட்டு.

போ போ போ இதை விட்டு பொல்லாத பேயே
கோபம் வரச் செய்யாதே கொடும்பாவி துரோகி நீயே.
சிவபூஜை வேளையிலே செங்கரடி புகுந்தார் போலே
இவன் வந்தாயே சீ பரஷ்டா இங்கு நில்லாதினி மேலே போ.

## 9. தரு அழகேசன்.

(ஷாஹே வரலா துப்யாரா.)

அழ. மானே யானும் தெரியாமல்
மதியீனத்தால் மறந்தே னே
உனை துறந் தே னே
திடங் குறைந் தே னே.

லலி. மகிதலந் தனிலே நமக்கேது மணுகாது
மன்னவா அறிவீரே.

அழ. மாதே கோதே மன்னிப்பாய் பிழை

லவி. நாதனே நீரினி யேதுக்கு மஞ்சாதீர்
பூதல மீதிலே சுகிப்போம் நாமே.

10. தரு மாதரை யென்ற வர்ன மெட்டு.

ஆடவரை நம்பாதே
அவனியில் பொல்லா ஆ.

மாடமாளிகை தருவேனென்று புகட்டுவார்
மையல் தீர்ந்தால் அரைக் காசேனுங் காட்டார் ஆ.

சொந்த யிரவல் வண்ணனிட வேட்டி
சொகுசாய் அணிந்து வருவாரே கை நீட்டி
சந்த களபம் பூசி கண்ணில் மை தீட்டி
காட்டுவார் ஜாலம் பூ சிரசினில் சூட்டி ஆ.

கரத்தை மீசையி விட்டு முருக்குவார் நீளம்
கியான சங்கீதர்போல் போடுவார் தாளம்
பெருத்த குபேரன் போல் பேசுவார் சீலம்
பெண்கள் ஆசித்தால் விடுவார் தெருக்கோலம் ஆ.

மாதரை மயக்கியே பறிப்பார்கள் பணமே
மகிழ்ந்து சாராயங் கள் குடிப்பார்கள் தினமே
பாதக ருறவிர்ப் படாதிரு நலமே
பாழும் சம்போகத்தா லென்ன சுக மே ஆ.

சுப்ப ராயன் பதத்தை சுகமுடன் பாடு
சுத்த சைதன்யமான பரமனை நாடு
எப்போது மிகபர சுகமதைத் தே டு
என்னும் ஆநந்தமாக விருக்கலாம் வீடு ஆ.

11. தரு. இராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

ஆ ஆ இவளென்ன அழகு
அந்தரத்திலே யிருந்து வந்துதித்த ஆரணங்கோதான்.

ஓகோ யிவளுக்கிணை யிவுலகிலொருவரில்லை
வும்பர் முனிவர் கண்டா லடி பணிகுவார் காலை ஆ. ஆ.

சரணம்.

குவலயமீதி லிந்த கோதையர்க் கிணை யேது
கூற வென்னால் முடியாது இப்போது
பவள வதாமது பருக வுகந்த து
பஞ்ச வர்ண கலந்து வார்த்த சிலைபோல் தோணுது ஆ. ஆ.

சுந்தர வதனமுள்ள சரசியின்மீது
சாலமையலதுவோ மீறுதிப்போது
இந்தமங்கைக்கிணை யெங்குங்கிட்டாது
எப்படியுங்கூடாமல் போகலாகாது. ஆ. ஆ.

ஆசைக்கிசைந்து சுகமருளும் ஒய்யாரி
அங்கஜனோடெசமர் செய்யும்கெம்பீரி
தாசன் சுப்பராயனை பணியும் விஸ்தாரி
தையல்மேல் வீசுதே வாடை கஸ்தூரி ஆ. ஆ.

12. தரு.

என்னிட நகரில் யென்னமாய் வரலாம்
மன்னவா நீயார் சொல் சொல் சொல்.

அ. உன்னிட நகரென்றெண்ணியே வந்தேன்
என்ன நீ செய்வாய் நில் நில் நில்.

ப. மன்னு நீயுமே மதியாமலென்னை
இன்னாள் வீரன்போ லென்முன்னே பேசுறாய்

அ. கண்ணியே வீண்மொழி பேசாதே

ப. கரமதை யென்முன்னே வீசாதே

அ. நீ யேசாதே.

ப. நீ பேசாதே.

13. தரு. இராகமாலிகை.

வருவாய் முத்தந் தருவாயடி
வந்தேன் சுகபை ரவிபாடி வ.

மருவ வுன்னைக் கோருதோடி
மையலினியான் சகிக்கேனடி
பருவ மோகன ரதியேவாடி வ

உருவி லுனக்கா னந்தபைரவி
ஒப்பிட எவருண்டோ மேவி
பரிவாய் கேதார கௌளம்யோசி
பாவையே நான் தன்யன்நேசி வ.

கண்மணியிதழூரல்பூரி
கல்யாணி நீ தருவாய்
காதல்தீரும் கமாசை கேளடி
பெண்மணியே ஸ்ரீராக கெம்பீரியே
பிரியன் சுப்பராயன் கீதம்கேள் நீதியே வ.

14. வேறு தரு. தோரியென்ற வர்னமெட்டு.

ஜே. அடி வாடி வுந்தனைதேடி ஓடிவந்தேனின்னம்
மோடி விடடிமையல் தாளேனடி

பங. அடபோடா அறிவில்லாதமூடா யிதுசரியோடா
இனிமேலென்னைக் கோறுதடா.

ஜே. அடிவஞ்சி மருவவுன்னை தஞ்சமென்றுமேயிதோ
கெஞ்சி வருந்துறேனே அஞ்சுகமே.

பங். அடவஞ்சகா வுந்தனுயிர் துஞ்சிடசெய்குவேனே
மிஞ்சி பேசாதேயஙகு பஞ்சையடா.

ஜே. கூர் கூர் வுந்தனைக் கூடிட நல்வரம்.

பங. பார் பார் வுன்னிட பிராணத்தைப் போக்குவேன்.

ஜே. அடி கார்த்தருள் கார்த்தருள் கண்ணுட்டியே.

பங. உன் யெண்ணம் பூர்த்தியாகாது சீ போவாயடா.

ஜே. அடிநேர்த்தி யாகவேயென்னை சேர்த்தணைத்துமே மையல்
தீர்த்திடாமல் போகாதே நில் நில் நில். பதில் சொல் சொல்
சொல். மனங கல் கல் கல்.

பங. குருதாசன் சுப்பறுயன் சொல் ஆசையுடன் கேளடா தோஷி
தொடாதே என்னை செல் செல் செல். என் மல் மல் மல்.
நீ புல் புல் புல்.

15. வேறு தரு துக்கடா.

ஆரடி யெந்தவூரடி வுந்தன் பேரடி
அதைக்கூறடி பின்பாரடி நீ

பல. அன்றென்னைக் கூடிவாவென்றுரக்கினையிட்டே வந்தீர்
இன்றதை மறந்துநீரும் இப்படிபேசலாமா.

16. அரசன் தரு தோடி.

என்னடி நீ படுநீலி யுனக்
கெப்போது கட்டினேன் தாலி நீ.
யேதோ செய்ய வந்தாய் கேலி சீ.
யெட்டி நட ஜெக ஜாலி.
அன்னீத மாகவே யென்னை சேர்ந்தே னென்று
சொன்னாலோ வுந்தனை பின்னஞ் செய்வேன் சீ. சீ.
போ போ அப்புறம் வோடி பொய்
புகல வந்தாயே நிர்மூடி அடி.

17. தரு காவடிச்சிந்து வர்னமெட்டு.

இ. சித்திரப்பதுமையாளே சித்தம் வைத்தொரு முத்தம் தாராய்
மெத்தமய்யல்கொண்டு வந்தேன்பாராய் உன்னை நத்தினேனே
யென் விரதம் தீராய்.

ப. நத்திவந்தே னென்றுமெத்த யெத்துவார்த்தைகள் கற்றுவந்த
பித்தனே பேயனே துஷ்டமூடனே வீணாய்
தத்தி தலைகீழ் வீழாதே வேடனே.

இ. மூடனென்றும் வேடனென்றும் நீ பாடிட யென்பாவம்
வோடிட பாரிலென்ன புண்ணியம் செய்தேனோ. உன்னை
கூடாத ஜென்மமிருந்து யேனோ.

ப. கூடிட யென்னை கொள்ளாதே கோதை பாஞ்சாலியின்மேலே
கொண்டானே கீசகன் தீராக்காதலே பீமன்-ஓடியே கொன்
றான் ஒரு நொடியிலே